**2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கான உத்தேச திருத்தம் சம்பந்தமான CPA கூற்று (தடுப்புக்காவலில் உள்ளவர்களின் உரிமைகள் - சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுதல்)**

**2017, மார்ச்சு 10, இலங்கை:** மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA) 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துதல் எனத் தலைப்பிடப்பட்ட சட்டமூலம் - (தடுப்புக்காவலில் உள்ளவர்களின் உரிமைகள் - சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுதல்) குறித்து தனது ஆழமான கவலையை வெளிப்படுத்துகின்றது. இச்சட்டமூலம் 2017 பெப்ருவரி 21 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு, 2017 மார்ச்சு மாதம் 6 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

இச்சட்டமூலம் குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையைத் திருத்துவதற்கான இதற்குமுந்திய சட்டமூலம் ஒன்றை மேம்படுத்தும் ஒரு முயற்சியென்று கூறப்படுகின்றது. இதற்குமுந்திய சட்டமூலம் CPA உள்ளிட்டவகையில் பல நலன்பிரதிநிதிகளின் எதிர்ப்புக் காரணமாக அரசாங்கத்தினால் கைவிடப்பட்டிருந்தது. தற்போதைய சட்டமூலம் தடுப்புக்காவலில் உள்ளவர்கள் அவசியமானவகையில் சட்டவறிஞர்களைச் சந்தித்து அவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் தற்போதுள்ள அரசியலமைப்பு மற்றும் நிர்வாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு நியதிச்சட்ட அங்கீகாரம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதை CPA அவதானிக்கின்றது. எவ்வாறாயினும், பாரதூரமான வழுக்களைக்கொண்ட 6A(2) மற்றும் 6A(6) உத்தேச வாசகங்கள் எமக்குப் பீதியூட்டுபவையாக அமைந்துள்ளன. இந்த ஏற்பாடுகள் சட்டமாக்கப்படின், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சட்டவறிஞர்கள் தடுப்புக்காவலில் உள்ளவர்களைச் சந்திப்பது "தொடரும் விசாரணைகளுக்குத் தடையாக அமையுமாயின்" அவர்களைத் தடுப்பதை அல்லது பொலிஸ் நிலையத்தினுள் பிரவேசிக்காமல் தடுப்பதை அனுமதிக்கும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துகின்றது.

கட்டுக்காவலின்போது சித்திரவதை மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான ஆவணப்படுத்தப்பட்ட பொலிஸ் வரலாற்றுச் சூழமைவில் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இத்தகைய பரந்த அதிகாரங்களை வழங்குவது ஆழமாகப் பீதியூட்டுவதும், ஏற்றுக்கொள்ள முடியாததுமாகும். மேலும், இந்தத் தேவைக்கதிகமான அகல்விரிவான வாசகங்கள் சட்டமூலத்தில் எடுத்துரைக்கப்பட்ட ஏனைய உரிமைகளையும் அர்த்தமற்றவையாக்கிவிடும். ஆகவே, இச்சட்டமூலம் தடுப்புக்காவலில் உள்ளவர்களுக்கான தற்போதுள்ள அரசியலமைப்பு மற்றும் நிர்வாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரமாகக் குறைத்து, இதற்குமுன்னர் இருந்த மோசமான ஏற்பாடுகளைப்போன்று, கட்டுக்காவலின்போது சித்திரவதைபுரிதல் உள்ளிட்டவகையில் உரிமைகள் மீறப்படுவதற்கு வழிசெய்யும். ஆகவே, உத்தேச சட்டமூலத்தின் மேற்குறிப்பிட்ட வாசகங்கள் அரசாங்கம் தெரிவிக்கும் சித்திரவதையை அறவே சகித்துக்கொள்ளாத கொள்கைக்கான அர்ப்பணவுணர்வோடு இணக்கமற்ற ஒன்றாகத் தென்படுகின்றது.

இந்த ஏற்பாடுகள் தற்காலிகமாகச் செயற்படுவதற்காக முன்மொழியப்படுகின்றன எனக் கூறப்படும் அதேவேளையில், மோசமான பெயரைச் சம்பாதித்திருந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற சட்டவாக்கங்கள் ஆரம்பகாலத்தில் தற்காலிக ஏற்பாடுகளாகச் சட்டமாக்கப்பட்டு, காலப்போக்கில் நிரந்தரமானவையாக மாறிவிட்டதை CPA அவதானிக்கின்றது. அரசாங்கம் சட்ட மறுசீரமைப்புச் சம்பந்தமான ஏதாவது முன்மொழிவுகள் சகல பிரஜைகளினதும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேச நியமங்களுடன் இணங்குவதையும், அவை இத்தகைய உரிமைகளுக்குத் தடையாக விளங்கும் ஒரு கைக்கருவியாக மாறாதிருப்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். இச்சூழ்நிலைகளின்கீழ், CPA அரசாங்கம் உடனடியாகச் சட்டமூலத்தின் 6A(2) மற்றும் 6A(6) வாசகங்களை நீக்கிவிடவேண்டுமென்று கோருகின்றது.